(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 149.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 திசெம்பர் 08, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1067/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் என்னவென்பதையும்;

(ii) அவ்வித வர்த்தக மேம்பாடுகள் எந்த மட்டத்திற்கு வெற்றியளித்துள்ளன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாடுகளில் தங்கியுள்ள ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஊழியர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தங்கியுள்ள நாடுகள் எவை என்பதையும்;

(iii) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி நல்கிய பொருட்களின் பெயர்கள் என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) ஏற்றுமதியாளர்கள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவிகளை நல்கியதா என்பதையும்;

(ii) ஆமெனில், உதவிகள் வழங்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களையும் அதனால் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1354/ '11

2.

கௌரவ புத்திக்க பத்திரண,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ கிரிக்கட் மைதானத்துக்கு அருகாமையில் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய மக்கள் வதியும், கமத்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஏறத்தாழ 5000 ஏக்கர் காணியை விளையாட்டுத்துறைக் கிராமமொன்றுக்காக அரசு சுவீகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது அதனுடன் தொடர்புடைய நிலஅளவைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந் நிலப்பரப்பினுள் ஐந்து குளங்களும் இரண்டு அரசாங்க பாடசாலைகளும் உள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் அந்த இரண்டு பாடசாலைகளையும் அப் பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) அவ்வாறெனின், அந்த பாடசாலைகள் மீண்டும் எங்கு நிறுவப்பட உள்ளன;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக் காணிகள் சுவீகரிக்கப்படுவதன் மூலம் வீடுகள் மற்றும் காணிகளை இழக்கின்ற மக்களுக்கு மீண்டும் வீடுகளும் காணிகளும் வழங்கப்படுமா;

(ii) அவ்வாறெனின் காணிகள் மற்றும் வீடுகள் எந்தப் பிரதேசத்தில் வழங்கப்படும்;

(iii) இதற்காகப் பயன்படுத்தப்படும் முறைமையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1596/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் சன்மான நிதியத்திற்கு பணம் கிடைக்கும் வழிகள் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தில் தற்போது காணப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை குறித்த நிதியத்தின் நிதிச் சொத்துக்களின் அளவு வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி நிதியத்திலிருந்து சன்மானம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சன்மானங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது சன்மானம் பெற விண்ணப்பித்துள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1686/ '11

4.

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தித் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1068/ '11

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள விருப்பத்திற்குரிய , இருதரப்பு, பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் எவை என்தை தனித்தனியாகவும்;

(ii) வேறு ஏதாவது நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றனவா என்பதையும்;

(iii) ஐக்கிய அமெரிக்காவுடன் ரி.ஐ.எப்.ஏ. (TIFA) தொடர்பிலான தற்போதைய நிலைமை என்ன என்பதையும்;

(iv) விருப்பத்திற்குரிய வர்த்தக உடன்படிக்கைகளை கையாளுகின்ற அதிகாரிகளின் பெயர்கள் என்ன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) ஏன் ஆசிய நாடுகளுடன் வினைத்திறன்மிக்க முறையில் வர்த்தகத்தில் இலங்கை ஈடுபடவில்லை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1355/ '11

6.

கௌரவ புத்திக்க பத்திரன,— பிரதம அமைச்சரும் புத்தசாசன சமயவிவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவ தரைப் படையின் இயந்திர காலாட் படையணியின் சேவா வணிதா பிரிவினால் இசை நிக்ழச்சியொன்றை நடத்துவதற்காக அந்தப் படைப்பிரிவின் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் 2011 மார்ச் மாத சம்பளத்திலிருந்து ரூபா ஐயாயிரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அப் பணம் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றபோது அந்த மாதத்தில் படைப்பிரிவினால் விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுப் புத்தகங்களுக்காக ஏறத்தாழ ரூபா நாலாயிரம் பணத்தொகை அந்த இசை நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்தது என்பதையும்;

(iii) மேற்கூறியவாறு மாதாந்த சம்பளத்திலிருந்து ஒரே தடைவையில் ரூபா ஐயாயிரம் பணத் தொகை அறவிடப்படுவதனால் இராணுவ தரைப் படையினரின் குடும்ப அங்கத்தவர்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக முறைசார் விசாரணையொன்றை நடத்தி தவறிழைத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில், தற்போது அச்சிடப்பட்டுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த முத்திரைகளை வெளியிடுவதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அறிமுகம் செய்யப்பட்ட ஒவ்வொரு முத்திரையினதும் படங்களின் பொருள் கோடல் யாதென்பதையும்;

(ii) மேற்படி முத்திரைகளை வடிவமைக்கவென நியமிக்கப்பட்ட குழுவின் அல்லது பதிப்புக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்கென அவர்களுக்குள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) — (ஒதுக்கப்பட்ட பதின்நான்காவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 07)

* 2.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 1718/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதிய 1727/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் உட்பிரிவு (2), 17 ஆம் பிரிவின் உட்பிரிவு (2) பந்தி (அ), மற்றும் 18 ஆம் பிரிவின் உட்பிரிவின் (2) பந்தி (அ) இன் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே மாதம் 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 9.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 யூலை மாதம் 20 ஆம் திகதிய 1715/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 1725/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

22.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

23.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் பார்க்க.

---